## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **அபிராமி** |
| Father’s / Husband Name | : | **வாசுதேவன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 34/2025 |

**தேதி : 03.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ தெரியும். தனியார் நிதி நிறுவனத்தில் லோன் வாங்கி கொடுப்பது சம்மந்தமாக எதிரியை எனக்கு தெரியும். எதிரி எனக்கு லோன் வாங்கி கொடுத்துள்ளார். தவணை தொகையை எதிரியிடம் கொடுப்பேன், அவர் வங்கியில் கட்டிவிடுவார். எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக பணம் தேவைப்படுவதாக சொன்னார். என் பெயரில் லோன் வாங்கி அவரே கட்டிவிடுவதாக சொன்னார். 22.12.2023ம் தேதி காரையில் உள்ள துவாரா நிறுவனத்தில் ரூ.50,000/- வாங்கி எதிரியின் Gpay நம்பருக்கு ரூ. 48,000/- அனுப்பிவைத்தேன். 25.02.2024ம் தேதி அன்று Equitos நிதி நிறுவனத்திலிருந்து ரூ.40,000/-பெற்று ரூ.38,000/-த்தை எதிரியின் நம்பருக்கு Gpay மூலம் அனுப்பிவைத்தேன்.

**Equitos நிறுவனத்தில் என்னுடைய உறுப்பினர் புத்தகம் நகல் ்அ.சா.ஆ.8 ஆகவும், துவாரா நிதி நிறுவனத்தின் கணக்கு பட்டியல்**

**அ.சா.ஆ.9 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 21.12.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.10 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 25.02.2024 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 22.12.2023ம் தேதி எதிரியின் வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.48,160/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.12 ஆகவும், 25.02.2024ம் தேதி எதிரி வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.38,000/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** கடன் வாங்கி கொடுத்தபிறகு எதிரி சில தவணைகள் செலுத்தியுள்ளார். அதன்பிறகு அவர் செலுத்தாததால் நிதி நிறுவனத்திலிருந்து என்னுடைய வீட்டிற்கு வந்து தவணை தொகை கட்ட சொன்னார்கள். அவர்கள் சொல்லித்தான் எதிரி ஊரை விட்டு சென்றுவிட்டார் என்ற விவரம தெரியவந்தது. எனக்கு தெரிந்து 30 நபர்களிடம் பணத்தை வாங்கிகொண்டு எதிரி திருப்பி பணத்தை கட்டவில்லை என்று ஊரில் சொன்னார்கள். இது சம்மந்தமாக புகார் கொடுக்க சென்றோம். சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரியும் நானும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். நான் மேலே சொன்ன லோன் தவிர எதிரி எனக்கு இரண்டு லோன் வாங்கிகொடுத்து அந்த தவணைகளை நான் கட்டிவருகிறேன். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு செட்டிகுளம் Union Bank of India வில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். எதிரியின் மாமனாருக்கு மருத்துவ சிகிச்சைக்காகவும், எதிரியின் வீட்டின் மேல்மாடி கட்டுவதற்காகவும் கடன் வாங்கி கொடுத்தேன். என் பெயரில் லோன் வாங்கி கொடுத்தால் நான்தான் கட்டவேண்டும் என்று எனக்கு தெரியும். நான் நம்பிக்கையின் பேரில் வாங்கி கொடுத்தேன். Equitos மற்றும் துவாரா ஆகிய நிதி நிறுவனத்தில் லோன் வாங்கியதற்காக எதிரி 3 அல்லது 4 தவணைகள் கட்டியிருப்பார். எதிரி எதனால் வாங்கிய லோனை கட்ட வில்லை என்று எனக்கு

தெரியாது. எதிரி சரியாகத்தான் தவணை கட்டிவந்தார் என்றாலும், எல்லோரும்சேர்ந்து தவணை கட்ட சொன்னதால் அவரால் சரியாக கட்ட முடியவில்லை என்றால் சரியல்ல.

நான் எதிரிக்கு Gpay மூலம் செலுத்திய தொகைக்கு உண்மையாக இருக்குமானால்எதிரியின் வங்கி கணக்கு பட்டியலை சரிபார்த்தால்தான் தெரியவரும் என்றால் சரியல்ல. எதிரி பாக்கி தொகையை சரியாக செலுத்திவுள்ளார் என்றாலும், இனிமேலும் செலுத்த தயாராகவுள்ளார் என்றாலும் பணத்தை கொடுத்தால் வாங்கிகொள்ள சம்மதம்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.